# தமிழர் ஒருங்கிணைப்புக்குழு – நோர்வே

## தமிழர் விளையாட்டுவிழா 2019

---

அனைவருக்கும் வணக்கம்,

மாவீரர் நினைவாக நாம் வருடாவருடம் நடாத்தும் தமிழர் விளையாட்டு விழாவின்போது நம்மத்தியிலுள்ள கழகங்களுடன் சந்திப்பினையேற்படுத்தி அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி, நடைமுறைச் சாத்தியமானவற்றை நிறைவேற்றிவருவது யாவரும் அறிந்ததே.

இவ்வாண்டு விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாகப் பல்லங்காடிகளுடன் கூடிய அரங்கநிகழ்வினையும் நடாத்தவுள்ளோம். அதேசமயம் சிறார்களுக்கான போட்டிகளில் மாற்றங்களை ஏற்படுத்தாது, நேரத்தை கருத்திற்கொண்டு பெரியவர்களுக்கான போட்டிகளில் கடந்தகால பங்கேற்றலை அடிப்படையாகக் கொண்டு சில விளையாட்டுகளை நீக்க முயன்றோம்.

ஆனால் கழகங்களின் சந்திப்பின்போது பெரியவர்களுக்கான போட்டிகளை குறைக்கவேண்டாமென கழகங்கள் வேண்டிக்கொண்டதற்கமைய அவர்களுக்கான போட்டிகளையும் கடந்த காலங்களைப் போலவே நடாத்தவுள்ளோம்.

அத்துடன் 17 வயதும் அதற்கு மேற்பட்ட அனைத்துப் பிரிவிலும் ஒரு போட்டியில் 5 போட்டியாளர்களுக்குக் குறைவாகப் போட்டியாளர்கள் தம்மைப் பதிவுசெய்யும்பட்சத்தில் அப்போட்டியானது இடம்பெறாதென்பதனையும் இங்கு அறியத்தருகின்றோம்.

நட்புடன் கரன்
விளையாட்டுக்குழு சார்பாக